# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1820/16 - 2013 ජූලි මස 24 වැනි බදාදා - 2013.07.24

*1820/16 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுங்க அறிவித்தல்

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 69 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு நியதிச் சட்டத்தின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 69 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள மத்தளை கிராமத்தில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய வளாகம் பிணைக் களஞ்சியமாக அமைதல் வேண்டுமெனவும் மற்றும் அதன் எல்லைகள் இந்த அட்டவணையில் ஒன்றாக அமைதல் வேண்டும் எனவும் மற்றும் அதன் எல்லைகள் இந்த அட்டவணையில் "அ" "ஆ" மற்றும் "இ" இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அமைதல் வேண்டும் எனவும், இக்கட்டளை மூலம் குறிப்பிட்டு பிரகடனப்படுத்துகிறேன். இந்த விமானநிலையத்தில் குறிப்பிட்டுள்ள எல்லைகளுக்குள், விமானப் பயணிகளை விமானங்களுக்கு ஏற்றுவதற்கும், விமானங்களிலிருந்து இறக்குவதற்கும், விமானத் தபால் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் என்பவற்றினை விமானங்களுக்கு ஏற்றுவதற்கும் மற்றும் இறக்குவதற்கும் களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்படும் பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி மற்றும் களஞ்சியப்படுத்தப்பட்ட பொருட்களை மீள வெளியிடுவதற்குரிய சட்டரீதியான விமானநிலையமொன்றாக அமைதல் வேண்டுமெனவும் மற்றும் மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய எல்லையினுள் அவ்விமானநிலைய எல்லைகள் மற்றும் அளவுகள் அட்டவணை "அ", "ஆ" மற்றும் "இ" இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டுமெனவும் பிரகடனப்படுத்துகிறேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி*
*(நிதி, திட்டமிடல் அமைச்சர்).*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2013, யூலை 24.*

*அதன் அட்டவணைகள் "அ", "ஆ" மற்றும் "இ" என கீழே விளக்கப்பட்டுள்ளன.*

### *அட்டவணை "அ"*

*தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் மாகம்பத்துவ சிறு தொகுதியின் தம்மென்னாவ, கெட்டன்வெவ, கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவில் தம்மென்னாவ குருதான கிராமத்தில் அமைந்துள்ள அரசாங்க நில அளவையாளரினால் 2012, மாச்சு மாதம் மற்றும் சம இலக்கம் தேசிய வரைபட கோப்பில் வெளிக்கள இலக்கம் E.D.M. ஹ2825, E.D.M. ஹ2950, இறுதிக் காணி வரைபட இலக்கம் 03 இடைக்கால வரைபட இலக்கம் 369, பத்திர இலக்கம் 405 ரேகை சித்திர இலக்கம் L/ஹ 519 இன் துண்டு இலக்கம் A 1408, 1409 மற்றும் 1411 ஆகிய துண்டுகள் மற்றும் மேலதிக இலக்கம் 7 வெளிக்களப் பத்திரத்தின் இறுதிக் கிராம வரைபடம் 575 இல் வரைபட துண்டு இலக்கம் 177 என குறிப்பிடப்பட்டுள்ள*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2 - G 18022

காணித்துண்டுகளை அளந்து தயாரிக்கப்பட்ட காணித்துண்டுகளின் எல்லையினுள் அமைந்துள்ள இருநூற்றி எண்பத்தியெட்டு தசம் ஏழு மூன்று ஐந்து இரண்டு ஹெக்டயார் (288.7352 ha) அளவு பரப்பளவைக் கொண்ட குருதான காட்டின் இங்கினியன்கஹஹேன, ஜம்புகஹஹேன மற்றும் பலெகுருதான வெல்கட்டு எனும் பெயருடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் காணித்துண்டுகள் முழுமையாக அடங்கும்.

***அட்டவணை A 1408***

தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் மாகம்பத்துவ சிறு தொகுதியின் தம்மென்னாவ, கெட்டன்வெவ, கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவில் தம்மென்னாவ குருதான கிராமத்தில் அமைந்துள்ள குருதான காடு எனும் காணியில் அரசாங்க நில அளவையாளரினால் 2012 மாச்சு மாதம் மற்றும் சம இலக்கம் தேசிய வரைபட கோப்பில் வெளிக்கள இலக்கம் E.D.M. ஹ 2825, E.D.M. ஹ2950, இறுதிக்காணி வரைபட இலக்கம் 03 இடைக்கால வரைபட இலக்கம் 369, பத்திர இலக்கம் 405 ரேகை சித்திர இலக்கம் L/ஹ 519 இன் துண்டு இலக்கம் A 1408 இற்கான எல்லைகள்:

வடக்கு: துண்டு இலக்கம் A 1413 உம் ;
கிழக்கு: துண்டு இலக்கம் A 1413 உம்;
தெற்கு: துண்டு இலக்கம் A 1413 இறுதிக்கிராம வரைபட 575 குருதானயும்;
மேற்கு: இறுதிக் கிராம வரைபட 575 குருதான, எனும் எல்லையினுள் அமைந்துள்ள ஹெக்டேயர் அறுபத்தி மூன்றும், ஹெக்டேயர் பத்தாயிரத்தில் ஒன்பதாயிரத்து முன்னூற்றி ஐம்பத்து நான்கு (63.9354 ha) அளவிலான நிலப்பரப்பும்.

***இறுதிக்காணி வரைபட இலக்கம் 03 துண்டு இலக்கம் 1409 இற்கான எல்லைகள்:***

வடக்கு: இறுதி கிராம வரைபட இலக்கம் 575 குருதானயும்;
கிழக்கு: துண்டு இலக்கம் A 1413 உம்;
தெற்கு: துண்டு இலக்கம் A 1413 மற்றும் , A 1410 உம்;
மேற்கு: துண்டு இலக்கம் A 1410 மற்றும் இறுதிக்கிராம வரைபட 575 குருதான எனும் எல்லையினுள் அமைந்துள்ள ஹெக்டேயர் நான்கும் ஹெக்டேயர் பத்தாயிரத்தில் ஆயிரத்தி முன்னூற்றி தொண்ணூற்றி ஏழு (4.1397ha) அளவிலான நிலப்பரப்பும்.

***இறுதிக் காணி வரைபட இலக்கம் 03 துண்டு இலக்கம் 1411 இற்கான எல்லைகள்:***

வடக்கு: துண்டு இலக்கம் A 1412 உம், இறுதிக்கிராம வரைபட இலக்கம் 575 குருதானயும்;
கிழக்கு: துண்டு இலக்கம் A 1410 உம்;
தெற்கு: துண்டு இலக்கம் A 1410 மற்றும் , A 1413 உம்;
மேற்கு: துண்டு இலக்கம் A 1413, A 1412 ஆகிய இறுதிக்கிராம வரைபடத்தின் 575 குருதான, எனும் எல்லையினுள் அமைந்துள்ள ஹெக்டெயார் பதினேழும் ஹெக்டெயார் பத்தாயிரத்தில் ஆயிரத்து முன்னூற்றி முப்பத்து ஏழு (17.1337 ha) அளவிலான நிலப்பரப்பும்.

மொத்த கூட்டுத் தொகை ஹெக்டேயார் எண்பத்து ஐந்தும் ஹெக்டயார் பத்தாயிரத்தில் இரண்டாயிரத்து எண்பத்து எட்டு (85.2088 ha) அளவிலான நிலப்பரப்பும் ஆகும்.

***அட்டவணை "ஆ"***

தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் மாகம்பத்துவ சிறு தொகுதியின் தம்மென்னாவ, கெட்டன்வெவ, கிராம உத்தியோகத்தர் பிரிவில் தம்மென்னாவ குருதானக் கிராமத்தின் குருதானக் காட்டின், இகினியன்கஹஹேன, ஜம்புகஹஹேன, பலெகுருதான வெல்கட்டுவ காணியில் அமைந்துள்ள அரசாங்க நில அளவையாளரினால் 2012, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதிய சம இலக்கமுடைய தேசிய வரைபட கோப்பின் வெளிக்கள இலக்கம் E.D.M. ஹ2825, E.D.M. ஹ2950, இறுதிக்காணி வரைபட இலக்கம் 575 இன் மேலதிக வரைபட இலக்கம் 07, பத்திர இலக்கம் 07, ரேகை சித்திர இலக்கம் L/ஹ 520 இன் துண்டு இலக்கம் 177 இற்கான எல்லைகள்:

வடக்கு: துண்டு இலக்கம் 178 மற்றும் இறுதி நிலவரைபடத்தில் 3 கீழ் மத்தளை தம்மென்னாவ;
கிழக்கு: இறுதி நிலவரைபடம் 3 கீழ் மத்தளை, தம்மென்னாவ மற்றும் துண்டு இலக்கம் 179 உம்;
தெற்கு: இறுதி நிலவரைபட இலக்கம் 3 இன் குருதான மற்றும் துண்டு இலக்கம் 180 உம்;
மேற்கு: துண்டு இலக்கம் 180, 181, 27, 28, 26C, 475B, 2, 8, 7 மற்றும் 178 ஆகிய எல்லையினுள் அமைந்துள்ள ஹெக்டேயர் இருநூற்றி மூன்றும் ஹெக்டேயார் பத்தாயிரத்தில் ஐயாயிரத்து இருநூற்றி அறுபத்தி நான்கும் (203.5264 ha) அளவிலான நிலப்பரப்பும்.

***அட்டவணை "இ"***

*தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுனுகம்வெஹெர பிரதேச செயலகப் பிரிவிற்குச் சொந்தமான மாகம்பத்துவ பிரதேசத்தின் கீழ் மத்தளை எனும் கிராமத்தில் அமைந்துள்ள அரசாங்க நிலஅளவையாளரினால் அளந்து தயாரித்த இலக்கம் 406 ஆவது வெளிக்கள பத்திரத்தின் இறுதிக்காணி வரைபட இலக்கம் 03 இல் குறிப்பிட்டுள்ள* A *1414 துண்டிற்கான எல்லைகள்:*

*வடக்கு: துண்டு இலக்கம்* A *1415 உம்;*

*கிழக்கு: துண்டு இலக்கம்* A *1415 உம்;*

*தெற்கு: துண்டு இலக்கம்* A *1415 மற்றும்* A *1408 உம், இறுதி வரைபட இலக்கம் 575 குருதானயும்,*

*மேற்கு: துண்டு இலக்கம்* A *1408 இறுதி வரைபட இலக்கம் 575 குருதான மற்றும்* A *1415 ஆகிய எல்லையினுள் அமைந்துள்ள ஹெக்டேயர் ஐநூற்றி பதினொன்று ஹெக்டெயார் பத்தாயிரத்தில் இரண்டாயிரத்து அறுநூற்றி நாற்பத்தி எட்டு (511.2648* ha*) நிலப்பரப்பினைக் கொண்ட லுனுகம்வெஹெர காடு எனும் நிலப்பிரதேசமும் இதில் அடங்கும்.*

*மேற்படி அட்டவணை அ, ஆ, இ ஆகிய மொத்த நிலப்பரப்பில் மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் சுங்க எல்லைகளாக இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

*08-384*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*